OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSLOUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## வெற்றிடங்கள்

இப்பல்கலைக்கழகத்தில் வெற்றிடமாக காணப்படும் கீழ்வரும் பதவிகளுக்கு உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01) தொழிநுட்ப அதிகாரி (ஒலியொளி) தரம் III [U-MT 1(III)]

தகைமைகள் : (i) க.பொ.த (உ.த) பரீட்சையில் ஏதேனும் பிரிவில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ii) (அ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்று அல்லது பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் நிறுவப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு/மின்னணுவியல்/பல் ஊடக அல்லது ஆடியோ வீடியோ நுட்பங்கள் ஆகிய துறைகளில் தேசிய தொழிற்பயிற்சி தகைமையின் 5ஆம் (NVQ Level 5) மட்டத்திற்கு குறையாத தகைமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) விண்ணப்பதாரர் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், இலங்கைத் தகைமைச் சட்டகத்தின் (Sri Lanka Qualifications Framework) 3ஆம் மற்றும் 4ஆம் மட்டங்களைப் பூர்த்தி செய்த பட்டப்படிப்பைத் தொடர்ந்திருப்பவராகவோ அல்லது தேசிய தொழிற்தகைமையில் (NVQ Level 5 & 6) 5ஆம் மற்றும் 6ஆம் மட்டங்களை பூர்த்தி செய்து டிப்ளோமா சான்றிதழைப் பெற்றவராகவோ இருக்க வேண்டும்.

அல்லது

(இ) விண்ணப்பதாரர் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மின்னணு உதிரிப்பாகங்கள். மின்னண்ணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு. பல்லூடகம் அல்லது ஒலி மற்றும் ஒளி தொழில்நுட்பம் அல்லது மின்னண்ணுவியல் தொடர்பான துறை அல்லது துறைகளில் பாடநெறியை நிறைவு செய்திருப்பதுடன் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒரு ஆண்டு பணி அனுபவத்தையும் பெற்றிருக்க வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் : ரூபா. 51,095 – 7 X 540; 10 X 640 – 60,575 (மாதாந்தம்) U-MT 1(III)
ஆட்சேர்ப்பு முறை : எழுத்துப்பரீட்சை மற்றும்/அல்லது பிரயோக பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

### 02) பாராமரிப்பாளர் (மின்சாரம்) தரம் III [U-MT 1(III)]

தகைமைகள் : (1) தொழிநுட்பம் தொடர்பான தேசிய சான்றிதழ் அல்லது சமமான தகைமையுடன் மூன்று (3) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல். (கற்கைநெறியை மேற்கொள்ளும் காலப்பகுதிக்குள் மேற்கொண்டிருத்தல் போதுமானது.)

அல்லது

(2) க.பொ.த (சா.த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் அல்லது அரச மாகாண சபை நிறுவனமொன்றில் அல்லது அரச கூட்டுத்தானமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் உரிய துறையில் பரிசோதகராக ஐந்து (05) வருட அனுபவத்தை பெற்றிருத்தல்.

சம்பள அளவுத்திட்டம் : ரூபா. 51,095 – 7 X 540; 10 X 640 – 60,575 (மாதாந்தம்) [U-MT 1(III)]
ஆட்சேர்ப்பு முறை : நேர்முகப் பரீட்சையின் மூலம்

### 03) பொது சுகாதார பரிசோதகர் (தரம் III) [U-MT 1(III)]

தகைமைகள் : சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பொது சுகாதார பரிசோதகர் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

சம்பள அளவுத்திட்டம் : ரூபா. 51,095 – 7 X 540; 10 X 640 – 60,575 (மாதாந்தம்) [U-MT 1(III)]
ஆட்சேர்ப்பு முறை : நேர்முகப் பரீட்சையின் மூலம்

### 04) நூலகத் தகவல் உதவியாளர் (தரம் III) [U-MN 1(III)]

தகைமைகள் : 1. (க.பொ.த) சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் / தமிழ் ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட மொத்தமாக 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

2. (க.பொ.த) உயர்தர பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்து பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல். (பொது அறிவு பரீட்சை தவிர) (பழைய பாடத்திட்டததின் கீழ் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானது.

பின்வரும் தகுதிகளைக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானம் தொடர்பாக முழு நேர / பகுதி நேர பயிற்சி அனுபவமுடையவராகவோ, மாணவராகவோ இருத்தல

மற்றும்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 06 மாதங்களுக்கு குறையாத கணினி தொழிநுட்ப பாவனை தொடர்பான திறமை, தகைமையைப் பெற்றிருத்தல்

சம்பள அளவுத்திட்டம் : ரூபா 49,475 – 17x 540- 58, 655 (மாதாந்தம்) [U-MN 1(III)]
ஆட்சேர்ப்பு முறை : எழுத்துப்பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம

### 05) சாராதிகள் தரம் III [U-PL 3(III)]

தகைமைகள் : 1. க.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல

மற்றும்

2. கனரக வாகனங்களை ஓட்டுவது தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரால் அளிக்கப்படும் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்க வேண்டியதுடன் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்டதன் பின் தொடர்ச்சியாக மூன்று வருட அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் : ரூபா. 48,005 - 16 X 490 - 55,845 (மாதாந்தம்) [U-PL 3(III)]
ஆட்சேர்ப்பு : தொழில்சார் பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

### 06) ஆய்வுகூட உதவியாளர் (தரம் III) [U-PL 2(III)]
### 07) விடுதி பொறுப்பாளர் மற்றும் சமையற்காரர் (தரம் III) [U-PL 2(III)]

மேலே 06, மற்றும் 07 குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கானது

தகைமைகள் : 1. க.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் பதவிக்கு பொருத்தமான மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனம் மூலம் வெளியிடப்பட்டுள்ள தேசிய தொழில்சார் தகைமை (NVQ) 2 அல்லது 3 மட்டத்திற்கு குறையாத தகைமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல். (கற்கைநெறிக்குரிய தேசிய தொழில்சார் தகைமை (NVQ Level) உறுதிப்படுத்துவதற்காக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் சமனான சான்றிதழ் (Certification of Equivalence) சமர்ப்பித்தல் வேண்டும்.

அல்லது

2. க.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் உரிய துறையில் தொழிற் தகைமையுடன் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

சம்பள அளவுத்திட்டம் : ரூபா. 44,575 - 16 X 490 - 52,415 (மாதாந்தம்) [U-PL 2(III)]
ஆட்சேர்ப்பு : தொழில்சார் பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

### 08) வேலைகள் உதவியாளர் (தரம் III) [U - PL 1 (III)]

தகைமைகள : க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் : ரூ. 42,775 - 16 x 450 – 49,975 (மாதாந்தம்) [U - PL 1 (III)]
தெரிவு முறை : தொழில்திறன் பரீட்சை மற்றும் அல்லது நேர்முகத் தேர்வு

**மேற்கூறப்பட்ட இல 01 மற்றும் 08 ஆகிய பதவிகளுக்கு வயதெல்லை – 18 வயதிற்கு குறையாமலும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.**

### 09) முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்) (தரம் III) [U-MN 1(III)]
### 10) முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சிய பொறுப்பாளர்) [U-MN 1(III)]

மேற்கூறப்பட்ட இல 09 மற்றும் 10 ஆகிய பதவிகளுக்கு

பொது தகைமைகள் : 1. க.பொ.த (சா.த) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ்மொழி, ஆங்கிலமொழி/ ஆங்கில இலக்கியம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

2. க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே தடவையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல். (பொது அறிவு பத்திரத்தை தவிர)

குறிப்பு : 1. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத கணனி மென்பொருள் பாவனை தொடர்பான ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமை மற்றும் கணனி மென்பொருள் பாவனை தொடர்பான இரண்டு (02) வருட அனுபவமுள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

2. பல்கலைக்கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களினால் பாதுகாப்பு வைப்பொன்றும் வைக்கப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பொது தகைமைகளுக்கு மேலதிகமாக கீழ் வரும் விசேட தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்) தரம் III பதவிக்கான**

விசேட தகைமைகள் : i. க.பொ.த (உ.த) பரீட்சையில் வணிக்கப்பிரிவில் ஒரே தடவையில் சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.

**முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சிய பொறுப்பாளர்) III தரத்திற்கானது**

விசேட தகைமைகள் : களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஒரு வருட அனுபவத்துடன் க.பொ.த (ச.தர) பரீட்சையில் வணிக பாடத்தில் சித்தியடைதல் அல்லது க.பொ.த (உ.தர) பரீட்சையில் கணக்கீடு பாடத்தில் சித்தியடைதல்

சம்பள அளவுத்திட்டம் : ரூபா 49,475 – 17x 540- 58,655 (மாதாந்தம்) [U-MN 1(III)]
ஆட்சேர்ப்பு : எழுத்து மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சையின் மூலம்.

வயது : வயது 18 இற்கு குறையாமலும் 30 இற்கு மேற்படாதவாறும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : 1. அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச்செலவு மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுக்கான கொடுப்பனவு வழங்கப்படும்.

2. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் பல்கலைக்கழக ஓய்வூதியத்திட்டம், ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றில் அங்கத்தவராக இருக்கும் பட்சத்தில் பல்கலைக்கழகத்தினால் அவரது மாதாந்த வருமானத்தின் 8% இற்கு சமனான அளவு பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கும் மற்றும் 7% இற்கு சமனான பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் வழங்கப்படும்.

3. மேலும் பல்கலைக்கழகத்தினால் மாதாந்த வருமானத்தின் 3% இற்கு சமனான அளவு பல்கலைக்கழக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் https://ou.ac.lk/ எனும் பல்கலைக்கழக வலைத்தலத்தில் (https//ou.ac.lk/staff-resources/ இல் Establishment Division இன் கீழ் காணப்படும் Application Non-academic) அல்லது இப்பழ்கலைக்கழகத்தின் கல்விசாரா தாபனப் பிரிவிற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்விசாரா தாபனப்பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவலை, நுகேகொட எனும் முகவரியில் **2025.09.18 ஆம் அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

அரச, அரச கூட்டுத்தாபன, வரையறுக்கப்பட்ட சபைகளில் சேவையாற்றும் விண்ணபதாரிகள் தங்களுடைய விண்ணப்பங்களை நிறுவனத் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். **கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும்.**

தேவையான தகவல்களை குறிப்பிடாமல் விடுதல், தெளிவற்றதாக இருத்தல், சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்காமல் இருத்தல், விண்ணப்பங்கள் உரிய திகதிக்குப் பின்னர் கிடைத்தல் அல்லது வேறு ஏதேனும் தேவைப்பாட்டை நிறைவேற்றாமல் இருத்தல் விண்ணப்பங்களை நிராகரிக்க காரணமாக அமையும். எந்தவொரு விண்ணப்பப்பத்திரமும் நிராகரிக்கப்பட்டதற்குப் பின்னர் எந்தவொரு காரணத்திற்காகவும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

பொறுப்புப் பதிவாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவலை, நுகேகொடை
2026.08.30

OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSLOUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL OUSL